*Reprint from "Kalaimagal".*

37


# கங்கைகொண்ட சோழன்

க. அ. நீலகண்ட சாஸ்திரி, எம். ஏ.

---


கங்கைகொண்ட சோழபுரமென்பது திருச்சிராப்பள்ளி ஜில்லாவைச் சார்ந்த உடையார்பாளையம் தாலூகாவின் கிழக்குக் கோடியில் ஓர் சிற்றூராய் இப்போது காணப்படுகிறது. ஆனால் முற்காலத்தில் இது தஞ்சாவூருடனும் காஞ்சீபுரத்துடனும் ஒத்த புகழையுடைய ஒரு பெரிய நகரமாக விளங்கியது. பல தலைமுறைகள் சோழ ராஜ்யத்தின் தலை நகரங்களில் ஒன்றாகச் சிறப்புற்றிருந்தது. இவ்வூரின் பழைய பெருமையை நமக்கு இக்காலத்திலும் கண்கூடாகக் காட்டக்கூடியது அங்கேயுள்ள கங்கைகொண்ட சோளீசுவரம் என்னும் சிவன் கோயில். இக்கோயிலின் அமைப்பு முற்றிலும் தஞ்சை இராசராசேசுவரமாகிய பிருகதீசுவர சுவாமி கோயிலை ஒத்துள்ளது. உருவத்தில் அதினும் சற்றுச் சிறியதாயினும், சிற்பவேலையில் அதை விஞ்சியது. இக்கோயிலும் இராசராசேசுவரத்தைப் போலவே கருவூர்த்தேவரால் ஒரு திருவிசைப்பாவிற் சிறப்பிக்கப்பட்டிருக்கிறது. கங்கைகொண்ட சோழபுரத்தின் மேற்குப்புறம் சோளகங்கம் என்ற ஒரு பெரிய ஏரி இருந்தது. இவ்வேரி ஒரு 'ஜலமயமான ஜயஸ்தம்பம்' என்று திருவாலங்காட்டுச் செப்பேட்டில் புகழப்பட்டிருக்கிறது. இப்போது ஏரியைக் காணவில்லை. ஆனால் அதன் கரைகளும் மதகுகளும் ஆங்காங்கு இடிந்த குவியல்களாகப் புலப்படுகின்றன. இப்போது ஜயங்கொண்ட சோழபுரத்துக்குச் செல்லும் சாலை இவ்வேரியின் நடுவே செல்கிறது.

கங்கைகொண்ட சோழபுரத்தையும், அந்நகரிலுள்ள ரன்ஈசுவர கோயிலையும், சோளகங்கம் என்னும் ஏரியையும் நிருமித்தவன் முதலாம் இராசேந்திர சோழன். இன்னும் நம் நாட்டில் உள்ள அநேக ஊர்களும் மண்டபங்களும் கங்கைகொண்டான் என்ற இவனது விருதைப் பின்பற்றியே அழைக்கப்படுகின்றன. இவன் தந்தை தஞ்சாவூர்க் கோயிலைக் கட்டின முதலாம் இராஜராஜன். இராஜேந்திரன் அவன் தந்தையின் அரசாட்சிக் காலத்திலேயே



தஞ்சாவூர் பிருகதீசுவரர் கோயில்

(இப்படம் இந்திய ஆர்க்கியலாஜிகல் ஸர்வே இலாக்காவிற்குப் பதிப்புரிமையுள்ளது.)



சண்டேசானுக்ரஹம்

இளவரசனாகப் பட்டம்பெற்றுப் பல போர்களில் வெற்றியடைந்து சோழராஜ்யத்தின் பெருமையைப் பெருக்கி நிலைநாட்டிய வீரன். இவன் ஆட்சிக்காலம் கி. பி. 1012 முதல் 1044 வரை யாகும். இவனுடைய ஆட்சியின் கடைசியான வருஷங்களில் உள்ள சாஸனங்களிலும், மற்றும் இவனுக்குப் பின் ஆண்ட அரசர்களின் சாஸனங்களிலும் இவனுக்குக் கொடுக்கப்பட்ட அடைமொழி என்னவென்றால், 'பூர்வதேசமும் கங்கையும் கடாரமும்கொண்ட' என்பதுதான். இதில் கடாரம் எனப்பட்டது இப்போது 'அக்கரைச் சீமை' என்று வழங்கிவரும் மலேயா தீபகல்பத்தையும் ஸுமாத்ரா என்னும் தீவையும் இன்னும் சில பிரதேசங்களையும் தன்னுள் அடக்கிக்கொண்ட ஸ்ரீ விஜயம் என்னும் பெயர் வாய்ந்த ஒரு பெருங்கடல் ராஜ்யம். 'அலைகடல் நடுவுட் பலகலஞ் செலுத்தி' ராஜேந்திரன் கடாரத்தின் மீது படையெடுத்துச் சென்ற செய்தியை மற்றொரு சமயம் விளக்கி எழுதுவோம். இப்போது அவன் கங்கையையும் பூர்வ தேசத்தையும் கொண்ட வரலாற்றைச் சற்று நுணுகி ஆராய்வோம். ஏனெனில், இந்தக் கங்கைப் பேரியாத்திரையினால்தான் இவனுக்குக் கங்கைகொண்ட சோழன் என்ற பெயர் கிடைத்தது.

இவன் பட்டத்துக்கு வந்து சில வருஷங்களுக்கெல்லாம் சோழராஜ்யமானது துங்கபத்திரை நதிக்குத் தெற்கேயுள்ள நாடு முழுவதும் பரவி இலங்கையையும் தன் வயமாக்கிவிட்டது. கிருஷ்ணா, கோதாவரி ஜில்லாக்களும் இவைகளுக்கு அருகிலுள்ள பிரதேசங்களும் அக்காலத்தில் வேங்கி ராஜ்யமென்ற பெயர் படைத்த ஒரு தெலுங்க ராஜ்யமாய் அமைந்திருந்தன. இவ்வேங்கி ராஜ்யமானது முதலாம் ராஜராஜ சோழன் காலத்திலேயே சோழ ராஜ்யத்திற்குக் கீழ்ப்பட்ட நட்பு ராஜ்யமாக ஏற்பட்டிருந்தது. ராஜேந்திரன் சகோதரி குந்தவை வேங்கி அரசன் விமலாதித்தனுக்கு மனைவியானாள்; அவள் மகன் இராஜராஜ நரேந்திரன் இராஜேந்திரன் மகள் அம்மங்காதேவியை மணந்தான். ஆகவே வேங்கிக்கும் சோழராஜ்யத்துக்கும் பலவிதங்களால் நெருங்கிய நட்பு ஏற்பட்டது. ஆகையால் வடநாட்டின்மீது படையெடுத்துச் செல்லக் கருதிய சோழ அரசனுக்குப் பாதி வழி ஏற்கெனவே தன் வயமாக நின்றது.

'பகீரதன் தவம் பெரிதா? என் கைவலி பெரிதா?' என்று நகைக்குமாப் போல் ராஜேந்திரன் தன் நாட்டைக் கங்கைநீரால் புனிதமாக்க விரும்பினன் என்கிறது திருவாலங்காட்டுச் செப்பேட்டுச் சாஸனத்தின் வடமொழிப் பாகம். அதே பாகமானது அரசன் தான் நேராகச் செல்லாமல் தன் சேனைத்தலைவனை மட்டுமே அனுப்பி, அவனைக் கங்கைக்கரையிலுள்ள பகை யரசரை

யெல்லாம் வென்று அவர்கள் தலைமேல் கங்கைநீர்க் குடங்களைக் கொண்டுவரச்சொல்லிக் கட்டளையிட்டு அவன் அங்ஙனமே செய்துகொண்டு திரும்பி வரும் வழியில் அவனைக் கோதாவரிக் கரையில் சந்தித்ததாகவும் கூறுகிறது. இச்சேனைத் தலைவன் சென்ற வழியும், அவனால் முறியடிக்கப்பட்ட அரசரும், அவன் கைப்பற்றிய நாடுகளும் இதே இடத்தில் ஒருவாறு குறிக்கப் பட்டிருந்தும் இந்த விஷயங்களை ஒழுங்காக எடுத்துரைப்பது இவ்வரசனுடைய 'திருமன்னி வளர' என்று தொடங்கும் தமிழ் மெய்க்கீர்த்தியே யாகும். அதில் கங்கைப் படையெழுச்சியைச் சார்ந்த பாகம் பின் வருமாறு:

விக்கிரம வீரர் சக்கரக் கோட்டமு
முதிர்பட வல்லை மதுர மண்டலமும்
காமிடை வளைநகர் நாமணைக் கோணமும்
வெஞ்சிலை வீரர் பஞ்சப் பள்ளியும்
பாசடைப் பழன மாசுணி தேசமும்
அயர்வில்வண் கீர்த்தி ஆதி நகர்வயிற்
சந்திரன் தொல்குலத் திந்திர ரதனை
விளையமர்க் களத்துக் கிளையொடும் பிடித்துப்
பலதனத் தொடுநிறை குலதனக் குவையும்
கிட்டருஞ் செறிமிளை ஒட்ட விஷையமும்
பூசுரர் சேர்நற் கோசலை நாடும்
தன்ம பாலனை வெம்முனை யழித்து
வண்டுறை சோலைத் தண்ட புத்தியும்
இரண சூரனை முரணுகத் தாக்கித்
திக்கணை கீர்த்தித் தக்கண லாடமும்
கோவிந்த சந்தன் மாவிழிந் தோடத்
தங்காத சாரல் வங்காள தேசமும்
தொடுகடற் சங்குகொ டடன்மஹி பாலனை
வெஞ்சமர் விளாகத் தஞ்சுவித் தருளி
யொண்டிறல் யானையும் பெண்டிர் பண்டாரமும்
நித்தில நெடுங்கட லுத்திர லாடமும்
வெறிமலர்த் தீர்த்தத் தெறிபுனற் கங்கையும்
.....................................
மாப்பொரு தண்டாற்கொண்ட கோப்பரகேசரிவன்மரான
உடையார் ஸ்ரீ ராஜேந்திரசோழதேவர்

இந்த வரலாறு ராஜேந்திரனுடைய பதினொராவது ஆண்டு, அதாவது கி. பி. 1023 முதல் தான் அவனுடைய பிரசஸ்தியில் காணப் படுகிறது. ஆகையால் இதிற்கண்ட செய்திகளெல்லாம் அதற்குச் சற்று முந்தித்தான் நடந்திருக்க வேண்டும்.

சக்கரக்கோட்டம் முதல் மாசுணி தேச மீறுகவுள்ள இடங்கள் வேங்கிநாட்டை அடுத்து நாகவமிச அரசரால் ஆளப்பட்டு வந்த ராஜ்யத்தைச் சார்ந்தவை. இப்போது அந்நாட்டுக்கு பஸ்தர் என்று பெயர்; இது விசாகபட்டணம் ஜில்லாவுக்கு மேற்கே உள்ளது. இராஜேந்திரன் சேனைத்தலைவன் மாசுணி தேசத்தை விட்டு, சந்திர வமிசத்தரசன் இந்திர ரதனை வென்று, ஒட்ட நாட்டையும் அதற்கருகாமையில் உள்ள தென்கோசலை நாட்டையும் கைப்பற்றிக்கொண்டு, தன்மபாலனுடைய தண்ட புத்தியையும், இரணசூரனுடைய தக்கண லாடத்தையும், கோவிந்தசந்தனுடைய வங்காள தேசத்தையும் அடைந்தான். கடைசியாக உத்திரலாடத்தரசன் மஹிபாலன் இச்சோழ சேனபதியின் சங்கநாதத்திற்கு அஞ்சிப் போர்க்களத்தைவிட் டோடிப்போக, அவனது யானைகளையும் பெண்டிர் பண்டாரங்களையும் பிடித்துக்கொண்டு கங்கைக் கரையை அடைந்தான். கோசலை நாட்டிற்குப் பின் கூறப்பட்ட நாடுகளெல்லாம் இப்போதுள்ள வங்காள மாகாணத்தின் பாகங்கள்; இவை அக்காலத்தில் மஹிபாலனால் ஆளப்பட்டுவந்த ராஜ்யத்தின் பகுதிகள். தன்மபாலன், இரணசூரன், கோவிந்தசந்தன் ஆகிய இவர்கள் பாலவமிசத்துப் பேரரசனான மஹிபாலனுக்குக் கீழ்ப்பட்ட சிற்றரசர்கள் ஆவார்கள். சோழ சயினியம் கங்கை கொண்டு மறுபடி தென்னாட்டுக்குத் திரும்பிய விஷயம் இத்தமிழ்ப் பிரசஸ்தியிற் கூறப்படவில்லை.

கங்கையைக் கொள்ளும்பொருட்டு நடத்தப்பட்ட இந்த திக்விஜய யாத்திரையானது சோழநாட்டில் யாவராலும் பாராட்டப் பெற்றதென்று எண்ண இடமுண்டு. எண்ணாயிரம் என்னும் ஊரின் மஹாஸபையார் ஒரு சாஸனத்தில் உபயோகித்திருக்கும் மொழித் தொடர் நன்றாகக் கவனிக்கத்தக்கது. அது பின் வருமாறு: 'உடையார் ஸ்ரீ ராஜேந்த்ர சோழதேவர் உத்தராபதத்தில் பூபதியரை ஜயித்தருளி யுத்தோத்ஸவ விபவத்தால் கங்கா பரிக்ரஹம் பண்ணியருளின கங்கைகொண்ட சோழனென்னும் திருநாமத்தால் இத்திருமுற்றத்தில் வைத்தருளின உத்தமாக்ரம் கங்கை கொண்ட சோழனில் உண்ணும்....வைஷ்ணவர்'.